உ

**குகமயம்**

**வேலும் மயிலும் துணை**

***நியுசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபைத் தலைவரின் ஆண்டறிக்கை***

***27 புரட்டாதி 2020***

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் நியுசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபையின் சார்பில் அன்புடன் வரவேற்கிறேன்.

***கொரோனா வைரஸ்***

கொரோனா வைரஸ் இந்த உலகத்தையே உலுக்கிவிட்டது. சமீபத்திய காலத்தில் நாம் இந்த வைரஸால் உயிர் இழப்பு, பொருளாதார நெருக்கடி உட்பட பல்வேறு முனைகளில் பாதிக்கப்பட்டோம். இதன் தாக்கம் எமது ஆலய செயல்பாடுகளிலும் தடங்கலை ஏற்படுத்தியது. எமது ஆலயம் 63 நாட்கள் மூடப்பட்டிருந்தது.அதிர்ஷடவசமாக நித்திய பூஜைகளை முகநூல் வழியாக காண கூடியதாக இருந்தது. இக்கட்டான நிலையிலும் எல்லா பூஜைகளையும் சிறப்பாக செய்த எமது ஆலய குருமார்கள் இருவர்களுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

இந்த சிரமமான காலத்தில் திருமுருகன் சமூகத்தின் ஆதரவுக்கும் புரிந்துணர்வுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். மனித இனம் எத்தனையோ ஆபத்துகளைக் கடந்து வந்துவிட்டது. இதையும் கடந்து நிற்போம். அதற்கு நாம் நம்பிக்கையோடு இருக்கவேண்டும். இருப்போம்.

***வருடாந்த மகோற்சவம் 2020***

இந்த வருடம் எமது கோயிலின் வருடாந்த மகோற்சவ விழா முதல் முறையாக இரண்டு நாதஸ்வரம் மற்றும் இரண்டு தவில் வாத்திய இசையுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ் இசையைக் கேட்கவும் பக்தர்கள் கூட்டம் நிரம்பியது. 2021ம் ஆண்டுக்குரிய திருவிழாவையும் நடத்த எமது திருப்பணிச்சபை ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. இந்த வருடம் வழங்கிய ஓத்துழைப்பை அடுத்த வருடமும் வழங்கி எமது திருவிழாவை சிறப்பாக நடைபெற உதவுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**சமூக மண்டப வேலைகள்**

இன்னமும் சமூக மண்டபத்தில் சமையலறை மற்றும் சமூக மண்டப மேம்பாட்டு வேலைகள் முடிவடையாமல் இருக்கிறது. இதற்கான நிதி சேர்க்கும் திட்டம் மற்றும் செயல்பாட்டு திட்டம் ஆகியவற்றை முடித்து விட்டோம். குறைந்தபட்சமாக இப்பணியினை நிறைவேற்ற டொலர் இரண்டரை லட்சம் தேவைப்படுகிறது. கொரோனா வைரஸின் தாக்கத்தின் காரணமாக இப்பணியை சிறிது காலத்துக்கு ஒத்திவைத்துள்ளோம்

**இளையோரின் பங்களிப்பு**

நமது இளையோர்களும் சிறுவர் சிறுமியர்களும் நவராத்திரி நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தார்கள்.வெள்ளிக்கிழமை மாலை நேரப் பூசையின் போது திருமுறைகள் பாடி எமது சமய பண்பாட்டை பின்பற்றுகிறார்கள். இவ்வாறாக எமது இளையோர் சங்கீதம்,விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அவர்கள் உடல் ஆரோக்கியத்தையும் மனவளர்ச்சியையும் வளர்த்துக்கொள்கிறார்கள். மற்றும் கோயிலில் நடைபெறும் முக்கிய பூசைகளில் கலந்துகொண்டு பிரசாதம் வழங்குதல் நிகழ்ச்சிகளின் பின் கோயிலை சுத்தபடுத்தல்,அலங்கரித்தல்,எமது ஆலய உணவு பொட்டலங்கள் விநியோகம் மற்றும் வலைத்தள அபிவிருத்தி என்பவற்றில் முக்கிய பங்காற்றுகிறார்கள். மேலும் இளைஞர்கள் எமது கோயிலின் நிர்வாக சபையிலும் சேர்ந்து வருங்காலங்களில் எமது கோயிலுக்கு தொண்டாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

**நிதி சேர்க்கும் நடவடிக்கைகள்**

எமது ஆலய வளர்ச்சிக்கு நிதி சேர்க்கும் முகமாக பல முயற்சிகளை எமது திருப்பணிச்சபை ,இளையோர்கள் ,சிறுவர் சிறுமியர்கள் மற்றும் தொண்டர்கள் செய்து வருகிறார்கள்.

1. உணவு பொட்டலங்கள் விநியோகம்
2. தீபாவளி உணவு திருவிழா
3. இன்னிசைத் தென்றல்

இந்த நடவடிக்கைகளின் வெற்றிக்கு காரணமாக இருந்த அனைவருக்கும் திருப்பணிச்சபை நன்றி கூற கடமைப்பட்டுள்ளது.கொரோனா வைரஸ்

காரணமாக இந்த வருடம் பண்ணும் பரதமும், முத்துச்சரம் மற்றும் ஒரு உணவு பொட்டலங்கள் விநியோகம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை.

**ஆலய குருக்கள்**

தினசரி காலை மாலை பூஜைகளையும் மற்றும் வருடாந்த திருவிழாக்களையும் சிறப்பாக செய்து எமது ஆலயத்தின் வளர்ச்சிக்காக சேவை செய்து வரும் பிரதம குருக்கள் மயூரநாதக் குருக்கள் , மற்றும் ராதாகிருஸ்ணசர்மா, வெங்கட்ராம சர்மா ஆகியோருக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஆலய தகவல் தொடர்பு**

வானொலி, முகநூல், மின்னஞ்சல், இணையதளம், ஆலய தொலைக்காட்சி, ஆலய அறிவிப்புக்கள் மற்றும் செய்தி மஞ்சரி மூலமாக ஆலய நிகழ்வுகளை உடனுக்குடன் அறிவித்து வருகிறோம். கடந்த இரண்டு வருடமாக எமது தகவல் தொடர்புகளில் பல மாற்றங்களை கொண்டு வந்துள்ளோம். எமது ஆலய இணையதளம் புத்தம் புது பொலிவுடன் மீண்டும் தொடங்கியுள்ளோம்.

**சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு**

கடந்த மூன்று வருடங்களாக திருப்பணிச்சபை சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விடயங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கு தேவையானவற்றில் கவனம் செலுத்தி வருகிறது. சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சபை பல நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தி அவற்றை அமுலாக்கி திருமுருகன் கோயிலுக்கு வரும் அனைவரின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த கடமைப்பட்டுள்ளார்கள். கொரோனா வைரஸின் சவால்களைச் சமாளிக்கவும் ஆலய குருமார்கள் மற்றும் ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் சுகாதார நலன் கருதி சில மாற்றங்களை அமுல்படுத்தியிருந்தோம்.

கடந்த 12 மாதத்தில் திருப்பணிச்சபை கீழ்வரும் புதிய பூஜைகளை அறிமுகப்படுத்தி அதிகப்பட்ச பக்தர்களின் பங்களிப்புக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீ ருத்ர ஹோமம் (05-07-20)

ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம் (மாதத்தின் முதல் சனிக்கிழமையில்)

மேலும் இக்கோயிலின் வளர்ச்சிக்கும் நமது சைவப்பணி தொடரவும் தொடர்ந்து உதவி செய்துவரும் தொண்டர்கள் அனைவருக்கும் எமது நிர்வாக சபையின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். மற்றும் தினசரி காலை மாலை பூசைகளையும் முக்கியமான வருடாந்த திருவிழாக்களையும் சிறப்பாகச் செய்து எமது கோயிலின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுவரும் எமது ஆலய குருக்கள் அனைவருக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இங்கு குறிப்பிடாத பலர் பல்வேறு வழிகளில் எமது ஆலயத்திற்கு ஒத்துழைப்பை வழங்கிய வண்ணம் உள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் ஆலய நிர்வாக சபையின் சார்பில் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்

நன்றி

வணக்கம்

சு. மனோகரன்

மனோகரன் சுப்பிரமணியம்

தலைவர்

நியுசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபை

